**கவனிக்க.**- 2006.6.16 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (ஆ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1450 - 2006 ජූනි 16 වැනි සිකුරාදා - 2006.06.16

1450 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு யூன் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 565 |


**கவனிக்க.**- குடிமக்களின் வீரச்செயல்களுக்கான மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2006, மே 26 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, யூன் 23 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, யூன் மாதம் 09 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஸ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப்பரீட்சார்த்திகளும்கீழ்வரும்விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர்;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலி சாரிடம பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவான தாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகாரசபையால் பரிசீலனை செய்வதற்குறப்பட்டதாகும்.

*1.* ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்தி களுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும் போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

*2.* பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

*3.* பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தி யோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

*4.* மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

*5.* பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

*6.* பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

*7.* வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப் பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப் படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

*8.* பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்ட தாகக் கருதப்படுவர்.

*9.* ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பரு மட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள் களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப் படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

*10.* கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறு மொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

*11.* பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்தி லேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம், முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப் பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக்கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை , மாட்டுத்தாள், முதலிய வற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

*12.* பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த் தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

*13.* பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப் பரீட்சார்த்தியடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

*14.* தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப் பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

*15.* பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப்பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

*16.* பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்.**

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்தலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப்பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப் படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்று பத்திரங்கள் உம்மிட மிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங் களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டு வரமறந்து போனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனிரேகைத் தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வை யாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றை யும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக்கருவிகள், பென்சில். அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப்பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப் பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல் மூலையிலன்று) உமக்கு கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை நீதிமன்ற பேச்சுப் பெயர்ப்பாளர் சேவையின் II ஆம் தர பேச்சுப் பெயர்ப்பாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான பரீட்சை - 2006

1. 224/15 ஆம் இலக்க, 1982, திசெம்பர் 23 ஆந் திகதி கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அரச அலுவலர்கள் பற்றிய நியதிக்கோவை II ஆம் பகுதி 9 ஆம் பிரிவிற்கேற்ப 'க' பகுதியில் காட்டப்படுகின்ற நியதிகளுக்கும், பாடத்திட்டத்திற்கமைய பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான பரீட்சைகள் கொழும்பில் நடாத்தப்படுமென இத்தால் அறியத்தரப் படுகின்றது :-

**பதவிகள் :**

(i) சிங்களம் - தமிழ் பேச்சுப் பெயர்ப்பாளர்
(ii) சிங்களம் - ஆங்கிலம் பேச்சுப் பெயர்ப்பாளர்
(iii) தமிழ் - ஆங்கிலம் பேச்சுப் பெயர்ப்பாளர்

2. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியமுடையவுமாகும்.

3. **சம்பள அளவு**.- ரூபா 15,540 - 6 x 140 - 6 x 120 - 14 x 290 - ரூபா 21,700

**குறிப்பு**.- 16,100 ரூபா சம்பள அளவை அடைவதற்கு முன் பரீட்சையுடன் கூடிய ஒரு வினைத்திறன் காணலும் சம்பள அளவு 17,430 ரூபாவை அடைவதற்கு முன் பரீட்சையற்ற ஒரு வினைத்திறன் காணலும் உண்டு.

4. விண்ணப்பதாரர், விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஆகக்கூடிய வயதெல்லையானது ஏற்கனவே அரச சேவையிலிருப்பவர்களுக்கு ஏற்றதன்று).

5. **தகைமைகள்**.- விண்ணப்பதாரர்கள் கீழ்க்காணும் தகைமை களைப் பெற்றிருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் (பழைய பாடத்திட்டம்) ஒரே அமர்வில் 4 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது புதிய பாடத்திட்டத்தில் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

மேலதிகமாக-

விண்ணப்பதாரர் மேற்கூறப்பட்ட பரீட்சைகளில் சிங்கள மொழி மூலம் சித்தி பெற்றிருப்பின், அவர்/அவள் கீழ்க்காணும் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும் :-

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆங்கிலமொழி 'அ' பாடத்திட்டத்தில் அல்லது ஆங்கில இலக்கியத்தில் அல்லது தமிழ்மொழி 'அ' பாடத்திட்டத்தில் அல்லது தமிழ் இலக்கியத்தில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

விண்ணப்பதாரர் மேற்கூறப்பட்ட பரீட்சைகளில் தமிழ் மொழி மூலம் சித்தி பெற்றிருப்பின், அவர்/அவள் கீழ்க்காணும் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும் :-

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களமொழி 'அ' பாடத்திட்டத்தில் அல்லது சிங்கள இலக்கியத்தில் அல்லது ஆங்கிலமொழி 'அ' பாடத் திட்டத்தில் அல்லது ஆங்கில இலக்கியத்தில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

விண்ணப்பதாரர் மேற்கூறப்பட்ட பரீட்சைகளில் ஆங்கில மொழி மூலம் சித்தி பெற்றிருப்பின், அவர்/அவள் கீழ்க்காணும் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும் :-

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களமொழி 'அ' பாடத்திட்டத்தில் அல்லது சிங்கள இலக்கியத்தில் அல்லது தமிழ்மொழி 'அ' பாடத்திட்டத்தில் அல்லது தமிழ் இலக்கியத்தில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

(ii) நீதிமன்றொன்றில் அல்லது அரச சட்ட நிறுவனமொன்றில் நிரந்தர பதவி வகிக்கின்ற நான்கு வருடங்களுக்குக் குறையாதவொரு தொடர்ந்த திருப்திகரமான சேவையிலுள்ள எழுதுனர் சேவை, சுருக்கெழுத்தாளர் சேவை, தட்டெழுத் தாளர் சேவையிலுள்ள அலுவலரொருவராக இருத்தல்,

அல்லது

(iii) அரச திணைக்களமொன்றில் நிரந்தரப் பதவி வகிக்கின்ற பேச்சுப் பெயர்ப்பாளர் சேவை அல்லது மொழி பெயர்ப் பாளர் சேவையில் இருக்கும் அலுவலரொருவாராயிருத்தல் அல்லது அரச பேச்சுப் பெயர்ப்பாளர் சேவையில் சித்தி பெற்று அரச திணைக்களமொன்றில் நிலையான பதவி யினைக் கொண்டுள்ள அலுவலரொருவராயிருத்தல்.

6. உரிய தகைமைகளைப் பெற்றிருக்கும் விண்ணப்பதாரர்கள் கீழ்க்காணும் விடயங்களில் எழுத்துப் பரீட்சை ஒன்றிற்கு உட்பட வேண்டும் :-

**பாடத்திட்டம் :**

(i) மொழி (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்), இலக்கியம் அல்லது பொது விடயமொன்று பற்றிய கட்டுரை, சுருக்கியெழுதல், கிரகித்தல் பற்றிய மதிப்பீடு, சொல்லாற்றல், நடைமுறைச் சொற்பிரயோகம், அதன் பாவனை, பிழைதிருத்தம் செய்தல் முதலியன. (இவ் வினாப்பத்திரமானது க. பொ. த. (உயர்தர) பரீட்சை வினாத்தாளை ஒத்ததாக இருக்கும்.

(ii) *மொழிபெயர்ப்பு :*

இவ்விடயம் மூன்று வினாத்தாளைக் கொண்டிருக்கும், அதாவது-

(i) சிங்கள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு அல்லது ஆங்கில மொழிக்கான மொழிபெயர்ப்பு.
(ii) தமிழ் மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு அல்லது ஆங்கில மொழிக்கான மொழிபெயர்ப்பு.
(iii) ஆங்கில மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு அல்லது தமிழ் மொழிக்கான மொழிபெயர்ப்பு.

(விண்ணப்பதாரர்கள் இலக்கியப்பகுதி, பொதுக் கவனத்தைச் சார்ந்த ஒரு பகுதி, அலுவலக அறிக்கை அல்லது ஆவணமொன்றில் இருந்து பெறப்பட்ட ஒரு பகுதி, பத்திரிகைக் கடிதம் அல்லது அறிக்கை ஒன்றினை மொழிபெயர்ப்புச் செய்ய வேண்டப் படுவர்.)

விண்ணப்பதாரர்கள் தத்தமது தகைமைக்கு ஏற்ப மேல் குறிப்பிட்ட (i) இன் கீழ் மொழி தொடர்பான ஒரு வினாவிற்கும் (ii) இன் கீழ் மொழிபெயர்ப்புத் தொடர்பான இரண்டு வினாக்களுக்கும் பதில் அளித்தல் வேண்டும். இரண்டு வினாத்தாள்களையும் தெரிவு செய்யும் போது மேலே 1 ஆம் பந்திக்கேற்ப விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் பதவிக்கேற்ப இரண்டு மொழிகளும் ஒன்றுக்கொன்று மொழி பெயர்க்கப்படுமாறு தெரிவு செய்தல் வேண்டும். மும்மொழியிலும் ஆற்றலுடைய விண்ணப்பதாரர்கள் மூன்றாம் வினாத்தாளிற்கும் கூட விடையளிக்கலாம். ஒவ்வொரு வினாத்தாளிற்குமான காலப்பகுதி இரண்டு மணித்தியாலங்களாகும்.

**குறிப்பு**.- அனைத்து விடைப்பத்திரங்களிலும் காணப்படும் எழுத்துத் தெளிவின்மை, எழுத்துப்பிழை என்பவற்றிற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.

7. இப்பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பப்படிவம் இவ் அறிவித்தலைத் தொடர்ந்து பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன் விண்ணப்பதாரர்கள் இம்மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப மாத்திரமே விண்ணப்பங்களைத் தயார் செய்தல் வேண்டும். இந்நோக்கத்திற்காக 'ஏ4' அளவுத்தாளில் தனித்தாள் பாவிக்கப்படல் வேண்டும். (வேறு எந்த அளவு காகிதங்களிலுமன்று) விண்ணப்பப் படிவமானது தட்டச்சில் அச்சிடப்படலாம் எனினும், படிவமானது தெளிவாக பிழையற்ற விதத்தில் விண்ணப்பதாரரின் சொந்தக் கையெழுத்தினாலேயே பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

8. விண்ணப்பதாரர் 250 ரூபாவை பரீட்சைக் கட்டணமாக செலுத்தப்பட வேண்டும். இக்கட்டணமானது காசுக் கட்டளை ஒன்றின் மூலம் அனுப்பப்பட வேண்டுமென்பதுடன் பெற்றுக்கொள்பவரின் பெயர் "நீதிச்சேவை ஆணைக்குழு செயலாளர்" பெற்றுக்கொள்ளும் அலுவலகம் "கொழும்பு நீதிமன்றம்" எனவும் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்வதுடன், அப்பற்றுச்சீட்டினை விண்ணப்பத்துடன் பிரித்து எடுக்கக் கூடியதாக இணைத்து அனுப்பும்படியும் வேண்டப்படுகின்றார்கள்.

9. விண்ணப்பங்கள் 2006, யூலை மாதம் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், நீதிச்சேவை ஆணைக்குழு அலுவலகம், கொழும்பு 12" என விலாசமிடப்பட்டு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் அடங்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினத்திற்கு பின்னதாக வந்து சேரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அரச சேவையில் உள்ள அலுவலர்களது விண்ணப்பங்கள் அவர்களது திணைக்களத் தலைவரூடாகவே அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

10. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் ஒவ்வொரு வினாத்தாளின் போது பரீட்சை நிர்வாகத்தினருக்குத் தமது ஆள் அடையாளத்தினை ஒப்புவித்தல் வேண்டும். இக்கருமத்திற்காகக் கீழ்க்காணும் ஆவணங்களுள் ஏதேனுமொரு ஆவணம் பயன் படுத்தப்படலாம் :-

(அ) தேசிய ஆளடையாள அட்டை.
(ஆ) செல்லுபடியானதொரு கடவுச்சீட்டு.
(இ) தபால் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியான தொரு ஆளடையாள அட்டை.

11. பரீட்சை நடைபெறுவது தொடர்பாக நீதிச்சேவை ஆணைக் குழுவினால் விடுக்கப்படுகின்ற விதிமுறைகளுக்குப் பரீட்சார்த்திகள் கட்டுப்படுவதுடன் அவ்வாறான சட்டவிதிகள் மீறப்படுமாயின் அவர் அப் பரீட்சைக்குத் தோற்றுவதிலிருந்து நீக்கம் செய்யப்படுவார்.

12. விண்ணப்பங்கள் தொடர்பாகத் தோன்றும் எந்தவொரு வினாவிற்கும் எனது முடிவே இறுதியானதாகும்.

பி. டபிள்யூ. டி. சீ. ஜயதிலக,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழு அலுவலகம்,
கொழும்பு 12,
2006, மே 24.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நீதிமன்ற பேச்சுப் பெயர்ப்பாளர் சேவையின் II ஆம் தர பேச்சுப் பெயர்ப்பாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான பரீட்சை - 2006**

(**கவனிக்க**.- விண்ணப்பப்படிவமானது பிழையற்றவிதத்தில் தெளிவாக விண்ணப்பதாரர்களின் சொந்தக் கையெழுத்தினால் பூர்த்தி செய்யப்படல் வேண்டும் இலக்கம் 1 முதல் 8 வரை முதல் பக்கத்தில் அடங்குதல் வேண்டும். உரிய இலக்கங்களை அதற்குரிய கூடுகளில் இடவும்)

பரீட்சைச் சுட்டிலக்கம் : ☐
(அலுவலக உபயோகத்திற்கு)

1. (i) முதலெழுத்துக்களுடன் கடைசியில் வரும் பெயர் (ஆங்கிலத்தில்) :------.
(ii) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :------. (தெளிவாக ஆங்கிலத்தில் எழுதவும்)

2. பால் :- ஆண் - 1 ☐
பெண் - 2

3. நிலையான முகவரி :------.

4. பிரவேசச்சீட்டு அனுப்ப வேண்டிய முகவரி :------.

5. விண்ணப்பிக்கும் பேச்சுப் பெயர்ப்புப் பதவி :
   1. சிங்களம் - தமிழ்
   2. சிங்களம் - ஆங்கிலம்
   3. தமிழ் - ஆங்கிலம்

6. தோற்ற விரும்பும் வினாப்பத்திரம் :
   (i) மொழி- 1. சிங்களம்
   2. தமிழ்
   3. ஆங்கிலம்

   (ii) மொழி பெயர்ப்பு :

   1. சிங்கள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு அல்லது ஆங்கில மொழிக்கு.
   2. தமிழ் மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு அல்லது ஆங்கில மொழிக்கு.
   3. ஆங்கில மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு அல்லது தமிழ் மொழிக்கு.

   (iii) மூன்றாம் வினாத்தாள் (இந்த வினாத்தாளுக்கு விடை அளிப்பின் இலக்கத்தைக் குறிப்பிடுக.)

7. (அ) பிறந்த திகதி :------.
   (ஆ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்தினத்தன்று வயது :-
   வருடங்கள் :------ மாதங்கள் :------ நாட்கள் :------.

8. அரச அலுவலர் ஒருவர் எனின்-

   (i) அமைச்சு/திணைக்களம்/நீதிமன்றம் :------.
   (ii) தற்போது வகிக்கும் பதவி :------.
   (iii) அப்பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :------.
   (iv) அப்பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட திகதியும் கோவை இலக்கமும் :------.
   (v) அலுவலக முகவரி :------.

9. தகைமைகள் :-

   (அ) வர்த்தமானி அறிவித்தலின் 5 ஆம் பகுதியின்படி எத்தனையாம் இலக்கத்தின் கீழ் தகுதி பெற்றுள்ளீர்கள் என்பதைக் குறிப்பிடவும் :------.

   (ஆ) கல்வித் தகைமைகள் :-

   (ஒவ்வொரு பரீட்சையின் பெறுபேறுகளையும் பரீட்சைச் சுட்டிலக்கங்களுடன் வெவ்வேறாகக் குறிப்பிடவும்)

   பிரதான தகைமை :

| பரீட்சையின் பெயர் | வருடம் | விடயங்கள் | பெறுபேறுகள் |
|---|---|---|---|
| | | | |

க. பொ. த. (சா. தரம்) :

| பரீட்சையின் பெயர் | வருடம் | விடயங்கள் | பெறுபேறுகள் |
|---|---|---|---|
| | | | |

**குறிப்பு**.- விண்ணப்பதாரர்கள் வர்த்தமானி அறிவித்தலின்படி பெற்றுக் கொண்ட உரிய பணத்திற்கான பற்றுச்சீட்டினை பிரித்தெடுக்கக் கூடியவாறு ஒட்டுதல் வேண்டும் :

பற்றுச்சீட்டு இல. :------.
அஞ்சல் அலுவலகம் :------.
திகதி :------.
பெறுமதி :------.

மேலே என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானதும், பிழைகளற்றதுமாகும். இப்பரீட்சை தொடர்பாக இங்கு குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு விடயம் பொய்யானது அல்லது பிழையானது எனத் தெரியவரின் அதன் காரணமாக இப்பதவிக்குரிய தகைமையை நான் இழப்பேன் என்பதனையும் நியமனத்திற்குப் பின்னர் இவ்வாறான தவறுகள் தெரியவரின் எந்தவித நட்டஈடுமின்றி நான் சேவையிலிருந்து வெளியேற்றப்படுவேன் என்பதனையும் அறிவேன் என்பதனை ஏற்றுக்கொள்கின்றேன்.

------
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :------

### திணைக்களத் தலைவரின் சான்றிதழ்

மேற்குறிப்பிட்ட பெயருள்ள விண்ணப்பதாரர் இந்த அமைச்சு/திணைக்களம்/நீதிமன்றில் சேவை புரிகின்றார் என்பதனையும் அவரினால் வழங்கப்பட்ட தகவல்கள் உண்மை என்பதுடன் அவரின் வேலை, நடத்தை, கடமைக்குச் சமுகமளித்தல் என்பன திருப்திகரமாக உள்ளதெனவும் உறுதிப்படுத்துகின்றேன். இப்பதவிக்கு அவர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்கவும் சம்மதிக்கின்றேன்.

------
அமைச்சின் செயலாளர்/திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பதவி :------
முகவரி :------
பதவி முத்திரை :------
திகதி :------

6-374

## வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு

*வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் அரச முகாமைத்துவ உதவியாளர்கள் (சுருக்கெழுத்தாளர்கள்) பதவிகளை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை - 2006*

வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் ஆங்கில சுருக் கெழுத்தாளர் பதவிகளுக்கு நியமனஞ் செய்வதற்கு அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை, மாகாண அரசாங்க முகாமைத் துவ உதவியாளர் சேவை, அரசாங்க அனுரசணையுள்ள நிறுவனங் களான கூட்டுத்தாபனங்கள், அரச வங்கிகள், நியதிச் சபைகள் மற்றும் தனியார் துறைகளில் சேவையாற்றும் சுருக்கெழுத்தாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **தகைமை.**-

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் விவாகமானவராயின் கணவன்/மனைவி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) இணைந்த சேவைகள் பணிப்பாளர் கீழ்வரும் அரசாங்க முகாமைத்துவ சேவையின் தரம் I, II மற்றும் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், விண்ணப்ப முடிவுத் திகதியில் 56 வயதுக்கு மேற்படாது குறைந்தபட்சம் ஐந்து வருட சேவையைப் பூர்த்தி செய்துள்ளவர்கள்.

(iii) வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் ஒப்பந்த அடிப்படை யில் சேவை புரியும் சுருக்கெழுத்தாளராகவும் விண்ணப்ப முடிவுத் திகதியில் 56 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் ; அல்லது

(iv) அரசாங்க அனுசரணையுள்ள நிறுவனங்களான கூட்டுத் தாபனங்கள், அரச வங்கிகள், வேறு நியதிச் சபைகள் மற்றும் தனியார் துறையில் சேவையாற்றும் ஆங்கில சுருக்கெழுத் தாளர்கள், விண்ணப்ப முடிவுத் திகதியில் 55 வயதுக்கு மேற்படாது குறைந்தபட்சம் 5 வருட சேவையை பூர்த்தி செய்துள்ளவர்கள்.

2. வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதுவராலயங்களில் தற்போது பணியாற்றுபவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களல்ல.

3. **தெரிவுசெய்யும் முறை.**- பரீட்சை ஆணையாளர் நாயகம் நடத்தும் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி தெரிவுசெய்யப்படும்.

3.1 விண்ணப்பதாரர்கள் ஆங்கில சுருக்கெழுத்துப் பரீட்சை யொன்றுக்குத் தோற்ற வேண்டும். சுருக்கெழுத்துப் பரீட்சைக்கான வேகம் நிமிடத்துக்கு 80 சொற்களாகும். இப்பரீட்சையில் 40 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளி களைப் பெற்றவர்கள் கணனி (கம்பியூட்டர்) தொடர்பான பரீட்சைக்கும் நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படுவர். எவ்வாறாயினும் எழுத்து மூலப் பரீட்சையில் மேற்குறிப்பிட்ட புள்ளிமட்டத்தைப் போதிய பரீட்சார்த்திகள் அடையத் தவறும் பட்சத்தில் குறைந்த புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகளை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கும் உரிமை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாள ருக்கு உண்டு.

3.2

| | | |
|---|---|---|
| ஆங்கில சுருக்கெழுத்து | - | 100 புள்ளிகள் |
| கணனி (கம்பியூட்டர் அறிவு) | - | 50 புள்ளிகள் |
| நேர்முகப் பரீட்சை | - | 50 புள்ளிகள் |

3.3 வெளிவிவகார அமைச்சின் செயலாளரினால் அமைக்கப் பட்ட குழுவினால் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் (உச்சப் புள்ளிகள் 50).

4. **பதவிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 (அ) தெரிவுசெய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் தொடக்கத்தில் கொழும்பிலுள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் இரண்டு வருடங்களுக்கு மேற்படாத குறிப்பிட்ட காலத்துக்குச் சேவையாற்ற வேண்டும். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் சேவையாற்றும் காலத்தில் அவரின் நடத்தை திருப்தியற்றதாகக் காணப்பட்டால் அவரது தெரிவு இரத்துச் செய்வதற்கு உட்பட்டதாகும். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் தேவைக்கேற்ப தெரிவு செய்யப்பட்டவரின் சேவையின் காலம் இவ்வமைச் சில் மாற்றம் செய்யப்படலாம்.

(ஆ) ஒவ்வொரு தூதுவராலயங்களின் தேவைகளின் அடிப்படையிலும் உத்தியோகத்தர்களின் தகைமை, திறமை ஆகியவற்றின் அடிப்படையிலும் (அந்நிய மொழியில் அறிவு ஆகியன) நியமனம் தீர்மானிக்கப் படும். மேற்கூறப்பட்ட நியமனங்களைச் செய்யும் பட்சத்தில் உத்தியோகத்தர்களின் சுய தேவை களையும் கஷ்டங்களையும் (பிள்ளைகளின் கல்வி ஆகியன) கவனத்தில் எடுக்கப்படவேண்டும் என்ற கடப்பாடு இவ்வமைச்சிற்குக் கிடையாது. மேலும் தெரிவுப் பரீட்சைகளின் திறமை அடிப்படையில் மட்டும் நியமனங்கள் செய்யப்பட வேண்டும் என்ற கடப்பாடு இவ்வமைச்சிற்குக் கிடையாது.

(இ) தெரிவுசெய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகமொன் றுக்கு நியமிக்கப்பட்டதும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் நிர்ணயிக்கும் விதிகள் நிபந்தனைகளுக்கு அமைய வழமையாக மூன்று வருடங்களுக்கு சேவையாற்ற வேண்டப்படுவதுடன் அது தொடர்பாக அவருடன் உடன்படிக்கை ஒன்றும் செய்துகொள்ள வேண்டும்.

4.2 கூட்டுத்தாபனங்கள், அரச வங்கிகள், நியதிச் சபைகள் மற்றும் தனியார் நிறுவனங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஆங்கில சுருக்கெழுத்தாளர் 5 வருடங்களுக்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிலும் வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களிலும் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய வேண்டும். (ஆரம்பத்தில் 2 வருடங்கள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிலும் 3 வருடங்கள் வெளிநாடுகளி லுள்ள இலங்கைத் தூதரகங்களிலும் பணிபுரிதல் வேண்டும்.) எப்படியாயினும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிலும் வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களிலும் கடமைபுரியும் கால எல்லை சேவையின் தேவைக்கேற்ப மாறுபடும். நியமனம் பெறுபவர்கள் 5 வருட கால ஒப்பந்தம் முடிவடைந்ததும் தங்களது பழைய பதவிகளுக்குத் திருப்பி அனுப்பப்படுவர்.

4.3 அரசாங்க சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் (மாகாண அரசாங்க முகாமைத்துவ சேவை) தெரிவாகும் பட்சத்தில் தற்போதைய சம்பள அளவை தொடர்ந்தும் பெறுவார்கள். ஏனையோர் 7,800 ரூபா நிலையான மாதாந்த சம்பளத்தைப் பெறுவார்கள்.

4.4 தெரிவுசெய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகமொன்றிற்கு நியமிக்கப்பட்டதும் உத்தியோகத்தர் அவரது கணவன்/மனைவி தகுதியான இரண்டு பிள்ளைகள் "தகுதியான பிள்ளைகள்" என்ற இப்பிரிவு உத்தியோகத்தரின் பராமரிப்பின் கீழ் வதியும் 21 வயதுக்குக் குறைந்த பிள்ளைகள் அவர் நியமனம் பெற்ற நாட்டுக்குச் செல்வதற்கும் திரும்பி வருவதற்குமாக பிரயாணச் செலவு, தங்குமிடவசதி மற்றும் வேறு கொடுப்பனவுகள் போன்றவற்றை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் நிர்ணயிக்கும் விதத்தில் அரசாங்கம் மேற்கொள்ளும்.

5. **விண்ணப்பிக்கும் முறை :**

5.1 அச்சடிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டாது. அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை இலக்கம் 1 இல் காணப்படும் மாதிரி விண்ணப்பப்பத்திரத்தைப் போன்று தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும். அரசாங்க சேவையில் இல்லாத விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை இலக்கம் 2 இல் காணப்படும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்தை போன்று தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும். ஏ4 அளவுத்தாளில் தயாரித்த தமது திணைக்கள/நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்புதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவம் இலக்கம் 1 பிரிவை உடையதாயின் முன்பக்க விடயங்கள் 1-15 வரை இருப்பதுடன் மிகுதி விடயம் பக்கம் 2 இல் இருக்க வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவம் இலக்கம் 2 பிரிவை உடையதாயின் முன்பக்கம் விடயங்கள் 1-13 வரை இருப்பதுடன் மிகுதி விடயம் பக்கம் 2 இல் இருக்க வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பமும் விண்ணப்பதாரி வெளிநாட்டுச் சேவைக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர் என்பதையும் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் உடனடியாக விடுவிக்க முடியும் என்பதையும் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்பதை திணக்களத் தலைவர் உறுதிசெய்தல் வேண்டும்.

5.2 விண்ணப்பங்கள் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைப் பிரிவு, பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற விலாசத்துக்கு 07.07.2006 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். அரசாங்க மற்றும் தனியார் துறை இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்களிலுள்ள சுருக்கெழுத்தாளர் பதவிகளை நிரப்புவதற்கான பரீட்சை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் சுருக்கெழுத்தாளர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான பரீட்சை" எனக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

6. **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக் கட்டணம் ரூபா 200 ஆகும். இத்தொகை பரீட்சை ஆணையாளர் அதிபதியின் 4000-20-03-20-13 ஆம் வருமானத் தலைப்புக்கு வரவு வைக்கப்படல் வேண்டும். இக்கட்டணத்தை எந்தவொரு தபால் அலுவலகத்திலும் செலுத்த முடியும். பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் பொருத்தமான கூட்டினுள் ஒட்ட வேண்டும். (பற்றுச்சீட்டு இலக்கம், திகதி, தபால் அலுவலகம் ஆகியன குறிக்கப்பட வேண்டும்.) எந்தச் சந்தர்ப்பத்திலாவது பரீட்சைக் கட்டணம் மீளளிப்புச் செய்யப்படமாட்டாது. பரீட்சைக் கட்டணமாக காசுக் கட்டளைகள் அல்லது முத்திரை அல்லது ஏதேனும் பிற பெறுகைகள் பரீட்சைக் கட்டணங்களின் கொடுப்பனவுக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

7. சகல அம்சங்களிலும் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தபாலில் தாமதமானது அல்லது காணாமற் போனது பற்றிய முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது. திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ் இந்த விண்ணப்பத்துடன் அனுப்பப்படுதல் கட்டாயமானதாகும்.

8. **பரீட்சைக்கு அனுமதித்தல் :**

8.1 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றது பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்ற ஒழுங்கு முறைக்கு அமைய விண்ணப்பதாரிகள் எழுத்துமூலப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

8.2 பரீட்சை ஆணையாளர் நாயகம் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகளை விநியோகிப்பார். பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்தி தமது அனுமதி அட்டையை தமது கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்டதன் பின்னர் பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தனது அனுமதி அட்டையை சமர்ப்பிக்க வேண்டும். அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சை எழுத அனுமதிக்கப்பட மாட்டார்.

8.3 பரீட்சார்த்தி ஒருவர் தமக்கு வழங்கப்பட்ட பரீட்சை நிலையத்தில் பரீட்சை எழுத வேண்டும். பரீட்சைக்கு சமுகமளிக்கும் முதல் நாளன்று பரீட்சார்த்தி தமது அனுமதி அட்டையை பொருத்தமான பரீட்சை நிலையத்தின் பரீட்சை மேற்பார்வையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும். பரீட்சார்த்திகள் பின்பற்ற வேண்டிய ஒழுங்குவிதிகள் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

**குறிப்பு.**- பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டது என்பது அவர் பரீட்சைக்குத் தோற்ற தகுதி உடையவர் என்ற கருத்தை குறிப்பிட மாட்டாது.

9. **பிழையான தகவல்களுக்கான தண்டனை :**

9.1 பரீட்சைக்கு முன்னர், பரீட்சையின்போது அல்லது பரீட்சையின் பிறகு பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சை எழுத தகுதியற்றவர் எனக் காணப்பட்டால் பரீட்சைக்குத் தோற்றும் அல்லது அவரது தகைமை நிராகரிக்கப்படும்.

9.2 பரீட்சார்த்தி ஒருவர் வழங்கியுள்ள ஏதும் தகவல் தாம் அறிந்த வகையில் பிழையானது எனக்காணப்பட்டால் அல்லது உண்மையான தகவல்களை வேண்டுமென்று மறைந்திருந்து கண்டுபிடிக்கப்பட்டால் அரசாங்க சேவையில் இருந்து அவர் நீக்கப்படுவார்.

10. **பரீட்சார்த்தியை அடையாளங்காணல் :**

10.1 பரீட்சார்த்தி ஒருவர் தான் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின்போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளரின் நம்பிக்கைக்கு ஏற்ப அவரது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். இதற்கென பின்வரும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களம் வழங்கிய தேசிய அடையாள அட்டை ;
(ii) தபால் மா அதிபரினால் சமீபத்தில் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் அடையாள அட்டை ;
(iii) இப்பரீட்சைக்கு மூன்று வருடங்களுக்கு மேற்படாது வழங்கப்பட்ட கடவுச்சீட்டு.

எச். எம். ஜி. எஸ். பளிஹக்கார,
செயலாளர்,
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு,
"குடியரசுக் கட்டிடம்",
த. பெ. இல. 583,
கொழும்பு 1,
2006, யூன் 01.

மாதிரி விண்ணப்பப்படிவம் - இல. I

**வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு**

*வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரகங்களிலுள்ள அரச முகாமைத்துவ உதவியாளர் (ஆங்கில சுருக்கெழுத்தாளர்) பதவி*

(அரச துறை ஊழியர்களுக்கு)

**பகுதி அ**

இல. : [          ]

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

1. (அ) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் :-----.
   (ஆ) முதலெழுத்துக்களுடன் கடைசிப் பெயர் :-----.
   (MR./MRS./MISS) (ஆங்கில தடித்த எழுத்தில்)

2. முகவரி :-
   (அ) அலுவலகம் :-----.
   (ஆ) பிரத்தியேகம் :-----.
   (இ) அனுமதிப்பத்திரம் அனுப்பவேண்டிய விலாசம் (ஆங்கிலத்தில் தடித்த எழுத்தில்)

3. (அ) பிறந்த திகதி :-
   ஆண்டு :-----. மாதம் :-----. திகதி :-----.

   (ஆ) விண்ணப்ப முடிவில் வயது :-----.
   வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.

4. சிவில் அந்தஸ்து :-----.

5. விவாகமானவராயின் கணவன்/மனைவியின் பெயர், தேசிய இனம் ஆகியவை :-----.

6. பிள்ளைகளின் எண்ணிக்கை, அவர்களது பெயர், பிறந்த திகதிகளும் மற்றும் அவர்களின் வயதுகளும் :-----.

7. கணவன்/ மனைவி தொழில் செய்பவராயின் தொழில் விபரங்கள் (அரச ஊழியராயின் முழு விபரங்களையும் தருக) :-----.

8. கல்வி தகைமைகள் (மொழிமூலம் உட்பட) :-----.

9. அரச சேவை/ மாகாண அரசாங்க சேவை ஆகிவற்றின் கீழ் சுருக்கெழுத்தாளராக/ தட்டெழுத்தாளராக முதல் நியமனம் பெற்ற திகதி :-----.

10. பதவியில் உறுதி செய்யப்பட்ட திகதி :-----.

11. தற்போதைய தரமும் அதில் நியமிக்கப்பட்ட திகதியும் :-----.

12. தற்போதைய வருடாந்த சம்பளம் :-----.

13. தற்போதைய கடமைகளின் தன்மை :-----.

14. பின்வருவனவற்றில் வேகம் :-
    (அ) ஆங்கில சுருக்கெழுத்து :-----.
    (ஆ) ஆங்கில தட்டெழுத்து :-----.

15. பின்வருவனவற்றில் தேர்ச்சி :-
    (அ) ஆங்கில மொழி :-----.
    (ஆ) சிங்களம்/ தமிழ்மொழி :-----.
    (இ) கணனி பற்றிய அறிவு :-----.
    (ஈ) வேறு பிறமொழிகள் :-----.

16. விண்ணபதாரர் முன்னர் சேவையாற்றிய தூதரகமும் (எவையேனும் இருப்பின்) சேவையாற்றிய காலப்பகுதியும் :----.

17. ஏனைய பிற தகைமைகள் :-----.

18. **குறிப்பு**.- வர்த்தமானி அறிவித்தலின் நிபந்தனைகளுக்கு அமைய பரீட்சைக்கான கட்டணத்தை தபால் அலுவலகத்தில் செலுத்தி அத்தொகைக்குப் பெற்ற பற்றுச்சீட்டை பின்வரும் கூட்டில் ஒட்டவும் :- [          ]

    (அ) பற்றுச்சீட்டின் இலக்கம் :-----.
    (ஆ) தபால் அலுவலகம் :-----.
    (இ) திகதி :-----.
    (ஈ) தொகை :-----.

19. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

17.06.2006 முந்திய ஐந்து வருடங்களில் நான் சகல வருடாந்த சம்பள உயர்ச்சிகளையும் பெற்றேன் எனவும் அத்துடன் எதுவித ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப்படவில்லை (எச்சரிக்கை தவிர) என்பதையும் இத்தால் உறுதிமொழிகிறேன். விண்ணப்பப் பத்திரத்தில் என்னால் தரப்பட்ட விபரங்கள் யாவும் நான் அறிந்த வரையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் உறுதிசெய்கிறேன்.

.....................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

### பகுதி ஆ

### திணைக்களத் தலைவரின் சான்றிதழ்

(திணைக்களத் தலைவரினால் பூர்த்தி செய்யப்பட வேண்டியது)

திரு./ திருமதி/ செல்வி .............................................................
.............................................................. என்பவர் இந்நிறுவனத்தில் 17.06.2006 க்கு முந்திய 5 வருட காலத்தில் சேவையாற்றியுள்ளார் எனவும் அவரது நடத்தை மற்றும் (அ) சம்பள ஏற்றங்களை தடையின்றி பெற்றுள்ளார் எனவும் (ஆ) எச்சரிக்கை தவிர) எந்தவித ஒழுக்காற்று நடவடிக்கைக்கும் ஆளாகவில்லை எனவும் நான் அறிந்தவரை சரியானவையாகும். அவர் தெரிவாகும் பட்சத்தில் அவரது தற்போதைய பதவியில் இருந்து உடனடியாக விடுவிக்க முடியும் .

.......................................................
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

உறுதிசெய்பவரின் பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

மாதிரி விண்ணப்பப்படிவம்-இல. 2

### வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு

வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரகங்களிலுள்ள அரச முகாமைத்துவ உதவியாளர் (ஆங்கில சுருக்கெழுத்தாளர்)
பதவி
(தனியார்துறை ஊழியர்களுக்கு)

### பகுதி அ

சுட்டிலக்கம் : [ ]
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

1. (அ) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் :-----.
   (ஆ) முதலெழுத்துக்களுடன் கடைசிப் பெயர் :-----.

2. முகவரி :-
   (அ) அலுவலகம் :-----.
   (ஆ) பிரத்தியேகம் :-----.

3. (அ) பிறந்த திகதி :-
   ஆண்டு :-----. மாதம் :-----. திகதி :-----.

   (ஆ) விண்ணப்ப முடிவில் வயது :-
   வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.

4. சிவில் அந்தஸ்து :-----.

5. விவாகமானவராயின் கணவன்/மனைவி பெயர், தேசிய இனம் ஆகியவை :-----.

6. பிள்ளைகளின் எண்ணிக்கை, அவர்களது பெயர், பிறந்த திகதிகளும் மற்றும் அவர்களின் வயதுகளும் :-----.

7. கணவன்/ மனைவி தொழில் செய்பவராயின் தொழில் விபரங்கள் (அரச ஊழியராயின் முழு விபரங்களையும் தருக) :-----.

8. கல்வித் தகைமைகள் (மொழி மூலம் உட்பட) :-----.

9. விண்ணப்ப முடிவுத் திகதியிலிருந்து 5 வருடங்களுக்குள் சேவையாற்றி நிறுவனங்களின் பெயர்களும் காலமும் (தயவு செய்து சேவைச் சான்றிதழ்களை இணைக்கவும்) :-

| நிறுவனத்தின் பெயர் | பதவி | காலம் | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

10. தற்போதைய வருடாந்த சம்பளம் :-----.

11. தற்போதைய கடமைகளின் தன்மை :-----.

12. பின்வருவனவற்றில் வேகம் :-
    (அ) ஆங்கில சுருக்கெழுத்து :-----.
    (ஆ) ஆங்கில தட்டெழுத்து :-----.

13. பின்வருவனவற்றில் தேர்ச்சி :-----.
    (அ) ஆங்கில மொழி :-----.
    (ஆ) சிங்களம்/ தமிழ்மொழி :-----.
    (இ) கணனி பற்றிய அறிவு :-----.
    (ஈ) வேறு பிறமொழிகள் :-----.

14. விண்ணப்பதாரர் முன்னர் சேவையாற்றிய தூதரகமும் (எவையேனும் இருப்பின்) சேவையாற்றிய காலப்பகுதியும் :----.

15. ஏனைய பிற தகைமைகள் :-----.

16. **குறிப்பு.**- வர்த்தமான அறிவித்தலின் நிபந்தனைகளுக்கு அமைய பரீட்சைக்கான கட்டணத்தை தபால் அலுவலகத்தில் செலுத்தி அத்தொகைக்குப் பெற்ற பற்றுச்சீட்டை பின்வரும் கூட்டில் ஒட்டவும் :-

    (அ) பற்றுச்சீட்டின் இலக்கம் :-----.
    (ஆ) தபால் அலுவலகம் :-----.
    (இ) திகதி :-----.
    (ஈ) தொகை :-----.

17. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

விண்ணப்பப்பத்திரத்தில் என்னால் தரப்பட்ட விபரங்கள் யாவும் நான் அறிந்த வரையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் உறுதிசெய்கிறேன். நான் வழங்கியிருக்கும் தகவல்கள் உண்மையற்றதென நியமனம் பெற முன்னர் நிரூபிக்கப்படுமாயின் தெரிவுசெய்யப்படுவதற்கான தகைமையை இழப்பேன் என்பதையும் நியமனத்திற்குப் பின்பு நிரூபிக்கப்படுமாயின் நட்டஈடுகள் இன்றி பதவியில் இருந்து அகற்றப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

*பகுதி ஆ*

**நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

(நிறுவனத் தலைவரினால் பூர்த்தி செய்யப்பட வேண்டியது)

திரு./ திருமதி/ செல்வி ................................................................... ............................................ என்பவர் ......................................... இந்நிறுவனத்தில் ......................................... முதல் சேவையாற்றுகின்றார் எனவும் அவரது நடத்தை மற்றும் மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் இவ்வலுவலகத்தின் பதிவேடுகளில் இருந்து சரியானவை என்றும் அவர் தமது கையெழுத்தை எனது முன்னிலையில் வைத்தார் என்றும் உறுதி செய்கிறேன்.

இவ்வலுவலர் தெரிவாகும் பட்சத்தில் அவரை தற்போதைய பதவியிலிருந்து உடனடியாக விடுவிக்க முடியும்.

........................................................
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

உறுதிசெய்பவரின் பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

6-453

---

## திட்டச் செயற்படுத்துகை அமைச்சின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் கருத்திட்ட அலுவலர்களுக்கான முதலாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை - 2006

திட்டச் செயற்படுத்துகை அமைச்சின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட அபிவிருத்தி அலுவலர்கள் ரூபா 1,32,840.00 வருடாந்தச் சம்பள அளவுத்திட்டத்தை அடைவதற்கு முன்னரும் கருத்திட்ட அலுவலர்கள் குறிப்பிட்ட சம்பள அளவுத்திட்டத்தில் மூன்றாவது சம்பள ஏற்றத்தை அடைவதற்கு முன்னருமான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடத்தப்படும். இதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 2006 யூலை மாதம் 14 ஆந் திகதியாகும்.

2. **பரீட்சைத் திட்டம்**.- கீழே தரப்பட்டுள்ள பாடங்களை உள்ளடக்கிய விதத்தில் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை அமைந்திருக்கும் :-

(i) நிதிப் பிரமாணக் குறிப்புகள்/ அலுவலக முறைமை (2 மணித்தியாலங்கள்) - 100 புள்ளிகள்

(ii) ஆங்கில மொழி (1 1/2 மணித்தியாலங்கள்) - 100 புள்ளிகள்

குறிப்பு.- (அ) ஓர் உத்தியோகத்தர் தமது விருப்பப்படி ஒரே தடவையில் அல்லது பல தடவைகளில் சகல பாடங்களுக்கும் தோற்ற முடியும்.

(ஆ) ஒரு பரீட்சார்த்தி சித்தியடைவதற்கு ஒவ்வொரு வினாத் தாளிலும் 40% புள்ளிகளையோ அல்லது அதற்குக் கூடுதலாகவோ பெற்றிருக்க வேண்டும்.

3. **பாடங்கள்** :

(அ) நிதிப் பிரமாணக் குறிப்புகள்/ அலுவலக முறைமை (2 மணித்தியாலங்கள்) - 100 புள்ளிகள்

(i) இலங்கையின் அரசாங்க முகாமைத்துவ முறைமை
(ii) நிதி முகாமைத்துவமும் வருடாந்த மதிப்பீடும்
(iii) தாபன விதிக்கோவையின் தீர்மானங்களும் நிதிப் பிரமானக் குறிப்புகளும்
தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்களும் உள்ளடக்கப்படுதல் வேண்டும். I, II, IV, V, VII, IX, XII, XV, XXIII, XXVI, XVII, XXX, XXXI, XXXII, XXXIII
அரசாங்க நிதிப் பிரமாணக் குறிப்பு பகுதி I (அத்தியாயம் X நீங்கலாக)
(iv) அலுவலக முகாமைத்துவம்

(ஆ) ஆங்கில மொழி (1 1/2 மணித்தியாலங்கள்) - 100 புள்ளிகள்

4. **தகைமைகள்**.- இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு திட்டச் செயற்படுத்துகை அமைச்சின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட சகல அபிவிருத்தி அலுவலர்களும் கருத்திட்ட அலுவலர்களும் தகுதியுடையவராவார்கள்.

5. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) இவ்வறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்ட மாதிரிப் படிவத்தின் பிரகாரம், A4 அளவு தாளில் இரு பக்கத்தையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும். இலக்கம் 1 இல் இருந்து 7 வரையிலான விபரங்கள் முதல் பக்கத்தில் வரும் வகையில் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பம் பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தினால் நிரப்பப்படுதல் வேண்டும்.

(ஆ) **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து பின்வரும் பரீட்சைக் கட்டணங்கள் அறவிடுவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

| பரீட்சைக் கட்டணம் | ரூபா |
|---|---|
| (i) முதற் தடவையாயின் கட்டணம் அறவிடப்படமாட்டாது | - |
| (ii) முதற் தடவையின் பின்னர் ஒவ்வோர் அமர்வுக்கும் முழுப் பரீட்சைக்கு | 115 |
| (iii) ஒரு பாடத்திற்கு | 75 |

பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 4000-20-03-20-13 வருமான தலைப்பிற்கு வைப்புச் செய்து இலங்கையிலுள்ள எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணபத்தில் நன்றாக ஒட்டி விடுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் போட்டோ பிரதியை தம்முடன் வைத்திருப்பது சிறந்ததாகும்.

(இ) விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்களுக்கூடாக "பரீட்சை ஆணையாளர் நாயகம், தேசிய மதிப்பீடும் சேவையும், இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்ல" என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் 2006 யூலை மாதம் 14 ஆந் திகதியன்றோ

அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். பரீட்சை ஆணையாளருக்கு முகவரியிடப்பட்டு விண்ணப்பம் அனுப்பும் காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பப்பத்திரத்தின் போட்டோ பிரதியை தம்முடன் வைத்திருப்பது சிறந்ததாகும்.

(ஈ) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொழியிலேயே விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(உ) பொருத்தமான வடிவமைப்புக்கு அப்பாற்பட்டதும், எல்லா தகவல்களையும் கொண்டிராததும், பிந்தி வந்தடைகின்ற விண்ணப் பங்கள் எதுவித அறிவித்தலு மின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் அஞ்சலில் தொலைந்ததாகவோ, தாமதித்ததாகவோ செய்யப்படும் முறைப்பாடுகள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.

6. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரீட்சார்த்திகள் யாவருக்கும் நேரசூசிகளுடன் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சைத் தேதிக்குக் குறைந்தது 7 நாட்களுக்கு முன்னரேனும் ஒரு பரீட்சார்த்தி தமது அனுமதி அட்டையைப் பெறாவிடின், அவர், பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு உடன் கால தாமதமின்றி தொடர்புகொள்ளுதல் வேண்டும். அவ்வாறு தொடர்புகொள்ளும்போது பின்வரும் தகவல்களையும் அறிவித்தல் வேண்டும் :-

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) பரீட்சார்த்தியின் முழுப் பெயர் ;
(iii) முழு முகவரி ;
(iv) விண்ணப்பத்தின் புகைப்படப் பிரதி ;
(v) பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதி.

7. **ஆளடையாள அட்டை**.- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் (ஒவ்வொரு பாடத்தின்போதும்) மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தங்கள் ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர். இதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள் ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஆளடை யாள அட்டை ;

(ஆ) செல்லுபடியான ஒரு கடவுச்சீட்டு

மேற்சொன்ன ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்ப தாரியின் பரீட்சார்த்தி நிலையை இரத்துச் செய்யவும் மறுப்பதற்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு தற்றுணிபின்பேரில் அதிகார முண்டு.

8. இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதி பெற்றவர்கள் மற்றும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்குச் சமுகமளிப்பதற்குக் கடமை விடுதலை வழங்குமாறு திணைக்கள/ நிறுவனத் தலைவர்கள் வேண்டப்படுகின்றார்கள்.

9. இவ்வொழுங்கு விதிகளில் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயமும் இந்த அமைச்சின் தற்றுணிபின்படி முடிவு செய்யப்படும்.

அஜித் நிவார்ட் கப்ரால்,
செயலாளர்,
திட்டச் செயற்படுத்துகை அமைச்சு.

திட்டச் செயற்படுத்துகை அமைச்சு,
மத்திய வங்கிக் கட்டிடம்,
சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 1.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**திட்டச் செயற்படுத்துகை அமைச்சின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் கருத்திட்ட அலுவலர்களுக்கான முதலாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை - 2006**

(**குறிப்பு**.- இப்படிவம் பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தில் சரியாகவும், தெளிவாகவும் நிரப்பப்படல் வேண்டும்.)

பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மொழிமூலம்

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

உரிய இலக்கத்தினை பெட்டிக்குள் இடுக.

....................................
(அலுவலக உபயோகத்துக்கு மாத்திரம்)

1. (i) முதலெழுத்துக்களுடன் இறுதிப் பெயர் (சிங்களத்தில்/ ஆங்கிலத்தில்) :-----.

(ii) முதலெழுத்துக்களுடன் இறுதிப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :-----.
(உ-ம் :- MR. SILVA, A. B.)

(iii) முதலெழுத்துக்கள் குறிப்பிடும் பெயர்கள் (சிங்களத்தில்/ ஆங்கிலத்தில்) :-----.

(iv) முதலெழுத்துக்கள் குறிப்பிடும் பெயர்கள் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :-----.

2. (i) அலுவலக முகவரி (சிங்களத்தில்/ஆங்கிலத்தில்) :-----.

(ii) அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :-----.

3. பிறந்த திகதி :-----.
வருடம் :-----. மாதம் :-----. திகதி :-----.

4. அபிவிருத்தி அலுவலராகக் கடமையேற்ற திகதி :-----.
(கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்ட சரியான திகதியைக் குறிப்பிடுக)
வருடம் :-----. மாதம் :-----. திகதி :-----.

5. வர்த்தமானி அறிவித்தலின் 2 ஆம் பந்தியின்கீழ் விண்ணப் பிக்கும் பாடங்கள் :-----.

(i) :-----.
(ii) :-----.

6. நீங்கள் முதல் தடவையாக இந்தப் பரீட்சைக்குத் தோற்றுகின்றீர்களா ? :-----.

7. முதற் தடவையாக இல்லாவிட்டால், செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் :-----.

| |
|---|
| முழுப் பரீட்சைக்கும் ரூபா 115. ஒரு பாடத்திற்கு ரூபா 75 பரீட்சைக் கட்டணமாக பரீட்சை ஆணையாளருக்கு 4000-20-03-20-13 வருமான தலைப்பில் வைப்புச் செய்து இலங்கையிலுள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இங்கு நன்கு ஒட்டி விடுதல் வேண்டும். |

8. நான் அளித்துள்ள விபரங்கள் சரியானவை என்றும், மேற் போந்த 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற உரித்துடையேன் என்றும் யான் உறுதி செய்கின்றேன்.

.....................................................
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :-----.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது அத்தகைய திணைக்களத் தலைவர் சார்பாகக் கையொப்பமிட அதிகாரம் அளிக்கப்பட்ட ஓர் உத்தியோகத்தர் அல்லது தனது உள்ளூர் தலைவர் முன்னிலையில் கையொப்பமிட வேண்டும்.

9. **கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :**

திரு./திருமதி/செல்வி ....................................................... எனது அலுவலகத்தில் ஓர் உத்தியோகத்தர் என்றும், அவரை எனக்கு நன்கு தெரியும் என்றும், அவர் ...................................... ஆந் தேதியன்று என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

.....................................................
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்
(அலுவலக முத்திரை பதிக்கப்படல் வேண்டும்)

பெயர் :-----.
பதவிப் பெயர் :-----.
முகவரி :-----.

10. **திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

நான்-

(i) மேலே கொடுக்கப்பட்ட விபரங்கள் செவ்வை பார்க்கப்பட்டுச் சரியாக இருக்கக் காணப்பட்டன என்றும்,
(ii) பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்றத் தகைமையுடையவர் என்றும் சான்றுப்படுத்துகின்றேன்.

..............................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(அலுவலக முத்திரை பதிக்கப்படல் வேண்டும்)

பெயர் :-----.
பதவிப் பெயர் :-----.
முகவரி :-----.

6-474

---

## பிழை திருத்தம்

### கல்வி அமைச்சு

ஆசிரியர் கல்வி தொடர்பான சேவைமுன் தொழிற்பயிற்சி நெறி ஒன்றைப் பயிலுவதற்கு தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கான அனுமதி - 2007

2006.05.26 ஆந் திகதிய 1447 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் மேற்குறிப்பிட்ட தலையங்கத்தின்கீழ் பிரசுரமான அறிவித்தலின் தமிழ் பிரதியில், பந்தி இல. 4.0 இல் அதன் 4.9 ஆம் உப பந்தியில் காணும் "பாடநெறி இல. 09-இஸ்லாம்" என்பதன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள 'கவனிக்க வேண்டியது- தெரிவு ஒழுங்குமுறை' என்பதில் வரும்-

"(ஆ) 4.9.1, 4.9.5, 4.9.3, 4.9.4 ஆகிய ஒரு சான்றிதழ்கள் பெற்ற விண்ணப்பதாரிகள்" என்பது "(ஆ) 4.9.1, 4.9.5, 4.9.3, 4.9.4 ஆகிய சான்றிதழ்கள் பெற்ற விண்ணப்பதாரிகள்"

என திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்.

ஆரியரத்ன ஹேவகே,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பத்தரமுல்லை,
2006, யூன் 02.

6-562

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.